## 109. உண்மையாய் உம்மை நோக்கி

### பல்லவி

உண்மையாய் உம்மை நோக்கி கூப்பிடும்
யாவருக்கும் அருகிலே இருக்கிறீர்

### அனுபல்லவி

*உம் கண்கள் அவர்களை நோக்கிடும்*
*உம் செவிகள் அவர்கள் சத்தம் கேட்டிடும்*

### சரணங்கள்

1. என்னை நோக்கி கூப்பிடு என்றீரே
உனக்கு பதில் கொடுப்பேன் என்றீரே
நீ அறியாததும் உனக்கு எட்டாததும்
பெரிய காரியம் அறிவிப்பேன் என்றீரே
- உண்மையாய் உம்மை

2. என்னை நோக்கி கூப்பிடு என்றீரே
அப்பொழுது விடுவிப்பேன் என்றீரே
என் நாமத்தையே நீ உயர்த்திடுவாய்
என்னை மகிமைப்படுத்துவாய் என்றீரே
- உண்மையாய் உம்மை

3. என்னை நோக்கி கூப்பிடு என்றீரே
மறுஉத்தரவு அருளுவேன் என்றீரே
ஆபத்துகாலத்தில் உன்னோடு இருந்து
தப்புவித்து கனப்படுத்துவேன் என்றீரே
- உண்மையாய் உம்மை